# எங்கே அந்த

# வெள்ளைக் குட்டி நாய்?

எங்கள் வீட்டிற்கு எடுத்து வந்த நாய் குட்டியும் காணாமல் போனது எப்படி என்பது புரியவில்லை.

கோவையில் ஒரு பொறியியல் கல்லூரியில்  படித்துவரும் எனது மகன்  ஒரு நாய் வளர்க்க ரொம்பவும் ஆசைப்பட்டான்.

அவனின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு அழகான  நாய் குட்டிக்காக காத்திருந்தார் எனது மனைவி.

எங்கள் வீட்டின் பின்பக்கம் ஒரு தெரு நாய் சில குட்டிகள் போட்டிருந்தது.  இரவெல்லாம் ஒரே சத்தம். நாய் குட்டிகள் எங்களை தூங்க விடவில்லை.

மறு நாள் காலை எனது மனைவி ஜன்னல் பக்கம்  எட்டிப்பார்த்தார்.

அந்த நாய் குட்டிகளில் ஒரு நாய் குட்டி எங்கள் வீட்டிற்கு வரப்போகிறது என்று புரிந்து போனது எனக்கு.

நாய்க்குட்டி வந்தால் அதனை சரியாக பராமரிக்க வேண்டும் என்ற கவலை அப்போதே என்னுள் புகுந்து கொண்டது.

எங்கள் வீட்டின் பின் பக்கம் இருந்தத அம்மையாரிடம் ஒரு நாய்க்குட்டிக்கு சொல்லி வைத்தார் என்  மனைவி.

அந்த அம்மையாரும் இரண்டாவது நாள் ஒரு வெள்ளை நாய்க்குட்டியை எடுத்துக்கொள்ள சொன்னார்.

பெண் நாய்க்குட்டிகளை அப்படியே விட்டு விடுவார்கள். ஆண் நாய்க்குட்டியை எடுத்து பொய் விடுவார்கள், ஆகவே இருக்கும் ஒரு ஆண் நாய் குட்டியை உடனே எடுத்துச்செல்ல அறிவுறுத்தினார் அந்த அம்மையார்.

அந்த மாலை

எனது மனைவி அந்த ஒரு வெள்ளை நாய்க்குட்டியை வீட்டிற்கு எடுத்து வந்து விட்டார் . பக்கத்துக்கு வீடு சகோதரியும் உடன் போனார்.

வெள்ளை நாய்க்குட்டியை எடுத்து வந்ததும் பக்கத்துக்கு வீடு சகோதரி ஓடி போய் பால் எடுத்து வந்து பாசத்துடன் வைத்தார்.

குடிக்க தெரியாமல் குடித்து அந்த வெள்ளை குட்டி.

இரவு வந்தது.

ஒரு பெரிய அட்டை பெட்டியை எடுத்து , அதனுள் ஒரு பெட் தயார் செய்து குட்டி நாய்க்கு படுக்கை தயார் செய்து, படுக்க வைத்தார் என் மனைவி.

இரவெல்லாம் ஒரே கத்தல். தூங்க முடியாமல் செய்தது அந்த குட்டி.

நள்ளிரவில் ஒரு முறை எழுந்து போய் பால் வைத்து வந்தார்.

மறுநாள் காலை எழுந்து போய் பார்த்தால் வெராந்தா முழுவதும் அங்கங்கே ஒன்றும், இரண்டும் கழித்து வைத்திருந்தது அந்த குட்டி நாய்.

எனது மனைவி முகம் சுளிக்காமல், அருவருப்பு படாமல் முழு வெராண்டாவும் , வாசலும் கழுவி விட்டார்.

அன்று முழுவதும் நாய்க்குட்டி தேவைகளை கவனித்தார்.

நாய்க்குட்டி எனது மனைவிக்கு நட்பாகிவிட்டது .

அன்று பூராவும் அவரையே சுற்றி சுற்றி வந்தது.

எனக்கு போட்டியாகியது அந்த வெள்ளைக்குட்டி. வழக்கமாய் நான் செய்வதை அந்த குட்டிநாயும் ஆரம்பித்து விட்டது.

எங்களின் காரை வீட்டிற்கு வெளியில் நிறுத்தி இருந்தோம்.

நிழலுக்காக காரின் அடியில் சென்று படுத்துக்கொள்ளும் . எனது துணைவியார் வெளியில் செல்லும்போதெல்லாம் , அந்த சத்தம் கேட்டு காரின் அடியில் இருந்து ஓடி வரும். காலை சுற்றி வரும்.

துணைவியார் வீட்டிற்குள் வந்து விட்டால் திரும்பவும் காருக்கு அடியில் சென்று படுத்து கொள்ளும்.

அன்று மாலை வெளியில் வாசற்படியில் எனது மனைவி உட்கார, இந்த நாய் குட்டியும் ஓடி வந்து அவரை ஒட்டி படுத்துக்கொண்டது.(பார்க்க படம்)



இரவு வந்து விட்டது. ஒரு கொட்டாங்கச்சியில் பால் வைக்க , மட மடவென்று தளக் தளக் என நாவினால் உள்ளிழுத்து குடித்தது.

எங்கே படுக்க வைப்பது என்று யோசனை.

வெராண்டாவில் படுக்க வைத்தால் நேற்று மாதிரி இரவெல்லாம் கத்தி, தூங்க விடாமல் செய்து விடும்.

காருக்கு அடியிலேயே விட்டு விடலாமா?

அன்று பகலில் தாய் நாய் குட்டி நாயை  அதனுடன் கூட்டிச் செல்ல முயற்சித்து இந்த பக்கம் அடிக்கடி நடமாடிக்கொண்டிருந்தது.

இரவில் அந்தக்குட்டி நாயை கவ்வி சென்று விடலாம். அதனால் வெளியில் காருக்கு அடியில் படுக்க வைக்க யோசனையாக இருந்தது.

மொட்டை மடியில் விட்டுவிடலாம் என்று முடிவானது.

மொட்டை மாடிக்கு எடுத்து சென்றோம்.சிறிது நேரம் விளையாடினோம். சுறு சுறுப்பாக ஓடி ஓடி விளையாடியது.

மனைவி மடியில் சிறிது நேரம் உட்கார்ந்து செல்லலாம் என்று உட்கார்ந்தார்கள்.

தலையை மனைவியின் நைட்டி பகுதியில் வைத்து, உடம்பை தரையில் கிடத்தி படுத்து , அப்படியே தூங்கி விட்டது.

சிறிது நேரம் காத்திருந்தோம். பிறகு மெல்ல விடுவித்துக்கொண்டு, கீழிறங்கி வீட்டிற்குள் வந்து படுத்துவிட்டோம்.

நள்ளிரவில் விழித்து கொண்ட என் மனைவி குட்டி நாயை போய் பார்த்து வரலாம் என்றார்கள்.

"படும்மா ... விடியட்டும்' என்றேன் நான்.

அவர் தூங்கியதாக தெரியவில்லை. காலை ஐந்து மணிக்கு திரும்பவும் குட்டி நாயைப் பார்த்து வரலாம் என்றார்கள்.

"விடியட்டும்' என்றேன்.

மனைவிக்கு வெகு நேரம் காத்திருக்க முடியவில்லை. வெளிச்சம் தலை காட்டியதும் மாடிக்கு புறப்பட்டார்கள்.

நானும் உடன் தொடர்ந்து போனேன்.

மாடி முழுவதும் தேடினோம். வெள்ளைக் குட்டியை காணவில்லை.

நாய் குட்டி தானே  வெளியேறி செல்ல வாய்ப்பே இல்லை.

தாய் நாய் மடியேறிட வலி இல்லை அதனால் குட்டியை கவ்வி சென்றிருக்க முடியாது. அதுவுமில்லாமல் அந்த தாய் நாய் வீட்டின் பின் புறத்தில் அதன் குட்டிகளுக்கு பால் கொடுத்துக்கொண்டிருந்தது.

அந்த குட்டிகளில் வெள்ளைக்குட்டியும் இருக்குமா என்று ஆவலாய் , ஆதங்கத்துடன் தேடினோம்.

வெள்ளைக் குட்டி அங்கும் இல்லை..

கழுகு / பருந்து எதாவது பறந்து வந்து தந்து கால்களால் இடுக்கி எடுத்து சென்றிருக்குமோ?

அய்யோ! அப்படி கழுகு எடுத்து சென்றிருந்தால் சுட்டியாய் இருந்த குட்டியை எப்படி கொத்தி உணவாக்கி கொண்டிருக்கும்?

உருட்டி உருட்டி பார்த்த அந்த அழகு கண்களை முதலில் கொத்தியிருக்குமா?

அப்படி கொத்தியிருந்தால் அந்த வெள்ளைக் குட்டி என்னமாய் துடித்திருக்கும்?

சே! கழுகு எடுத்து சென்றிருக்க வாய்ப்பில்லை. வீடு மாடி மேல் கழுகு பறந்து பாத்ததில்லையே? - இப்படி நினைத்து மனது சமாதானத்திற்கு முயன்றது.

கழுகு எடுத்து செல்லவில்லையானால் வெள்ளை குட்டி காணாமல் போனதுதான் எப்படி?

மடியிலும், தெருவிலும் தேடுவதை பார்த்த, வெள்ளைக் குட்டி யை எங்களுக்கு கொடுத்த பின் வீடு அம்மையார் விவரம் கேட்டார்கள்.

சொன்னோம்.

பூனை எதாவது வந்து தூக்கி போயிருக்கும் என்றார்கள்.

அடிக்கடி ஒரு பூனை வந்து செல்லும்.

எங்கிருந்தோ வந்து, எங்கள் மாடி ஏறி, மாடியிலிருந்து கீழே விரைந்த வந்து , அங்கே நிறுத்தி வைத்திருக்கும்  டூ வீலெர்  சீட்டில் தந்து கல் சுவடுகளை பதித்து சென்றிருக்கும்.

காலையில்  டூ வீலெர் கருப்பு சீட்டில் அதன் சுவடுகளைப்பார்த்து பூனை வந்து சென்றிருக்கும் என்று அனுமானிப்போம்.

நாய்க்குட்டியை தூக்கி செல்லும் அளவிற்கு பெரியதா, பலமுடையதா  அந்த பூனை?

தெரியவில்லை.

அந்த வெள்ளைக்குட்டி எப்படி காணாமல் போயிருக்கும் . . . இப்படியா . . . அப்படியா . . . என்று பல வகைகளில் எண்ணங்கள் குதிரை ஏறின.

வெள்ளைக்குட்டி எங்கிருந்தாவது ஓடி வந்து விடாதா?

பத்திரமாய் இருக்க வேண்டும் என்று எண்ணி மிக பத்திரமான இடம் என நினைத்து மொட்டை மடியில் விட்டது வந்தால்...?

எங்கே? எப்படி? யாரால்? வெள்ளைக்குட்டி கடத்தப்பட்டது?

எப்படி காணாமல் போனது? அனுமானிக்கவே முடியவில்லை.

மலேசியாவிலிருந்து கிளம்பிய விமானம் எங்கே போனது? அதிலிருந்தவர்கள் என்ன ஆனார்கள்? என்று பயணித்தவர்களின் உறவினர் தவிப்பது போலவே, காணாமல் போன விமானம் பற்றி எதாவது தகவல் கிடைக்காதா என்று எதிர்பார்த்து தவிப்பது போலவே வெள்ளை நாய்க்குட்டிக்கு என்னதான் ஆனது என்பது பற்றி தெரிந்து கொள்ள மனம் தவிக்கிறது. வலிக்கிறது.

எனது அடுத்த பேனாவில் . . .

**எனக்காக ஊட்டி குளிரையும் பொருட்படுத்தாமல் ஊட்டி வந்த சாவி? -**

**உலகப்புகழ் பெற்ற ஓவியர் புகழேந்தி தேடிய நான்!**

-